بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

### பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் *13.02.2015* அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**Summary of the Friday Sermon - 13 February 2015 (Tamil)**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், சமூக குறைபாடுகள், பலவீனங்கள் சம்பந்தமாக ஒரு குத்பா வழங்கியிருந்தார்கள். அதில் அந்த பலவீனங்களின் காரணங்களைக் கூறி அதிலிருந்து தப்பிப்பதற்கு கவனமூட்டியிருந்தார்கள். இந்த கருத்து இப்போது கூட அவசியமானதாக இருக்கிறது. எனவே, நான் அதிலிருந்து பயனடைந்தவாறு இன்று அக்கருத்தை எடுத்துள்ளேன். பலவீனங்கள் மற்றும் குறைபாடுகள் எப்போதும் இரு வகைப்பட்டதாக இருக்கின்றன. ஒன்று, தனிப்பட்ட பலவீனங்கள், குறைபாடுகள்; இன்னொன்று, சமுதாய பலவீனங்கள் மற்றும் குறைபாடுகள் ஆகும். அதுபோன்று நிறைகளும் இரு வகைப்படும். ஒன்று, தனி மனித நிறைகள், இன்னொன்று சமுதாய நிறைகள் ஆகும்.

தனி நபர் குறைபாடுகள் என்பது தனிப்பட்ட நபர்களிடம் ஏற்படுகிறது. ஆனால் சமுதாய ரீதியில் இருப்பதில்லை. அதுபோன்று சில நிறைகள் தனி மனிதர்களிடம் காணப்படுகின்றன. ஆனால் சமுதாய அளவில் அவை இருப்பதில்லை. தனி நபர்கள் தமது அறிவு மற்றும் முயற்சியால் சில சிறப்புகளை தம்மிடம் உருவாக்கிக் கொள்கின்றனர். அதுபோன்று குறைபாடுகளின் காரணங்கள் மற்றும் காரணிகள் ஆகியவை ஒவ்வொரு மனிதரின் சூழ்நிலைகளினால் உருவாகின்றன. தீமை மற்றும் நன்மைகள் தொடர்பாக ஒரு விஷயம் நினைவில் கொள்ள வேண்டும். நன்மை – தீமை, குறை – நிறைகள் தமது சூழ்நிலைகளின் தாக்கங்களின் விளைவால் உருவாகின்றன. அதற்கு உதாரணம் இவ்வாறாகும். நிலமில்லாமல் ஒரு விதை வளர முடியாது அல்லது புதிய கண்டுபிடிப்புகளில் புதுவகையான மண் தயாரிக்கப்படுகிறது. அதில் தண்ணீரை ஈர்க்கும் சக்தி மற்றும் விதையை வளர்க்கும் திறன் ஊட்டப்படுகிறது. பெரும் பெரும் பாத்திரங்களில் வைக்கப்படுகிறது. பெரிய பெரிய அரங்குகளில் அவை இவ்வாறு சாகுபடி செய்யப்படுகின்றன. எவ்வாறிருப்பினும், அது அல்லாமல் விதையை வளர்க்க முடியாது. எந்த விதையையும் சரியாகப் பயன்படுத்த அதனை வளர்க்கும் நோக்கத்தை அடைவதற்கு அதற்கு நிலம் அல்லது நிலத்திற்கு ஒப்பான சூழ்நிலையை ஆயத்தப்படுத்தும் தேவை உள்ளது. அது அல்லாமல் விதை வளர்ந்தாலும் கூட சிறிது காலத்திற்குள்ளாகவே மரணித்துப் போய் விடும். அதுபோன்று தீமை அல்லது நன்மை ஆகியவை குறைபாடுகள் அல்லது நிறைகளின் காரணமாக உருவாகின்றன. அவை சுற்றுப் புறத்தின் தாக்கங்களின் விளைவால் உருவாகின்றன.

எனவே, தீமைகள் அல்லது நன்மைகள் வளர்வதில் சுற்றுப்புற சூழ்நிலை ஓர் இன்றியமையாத பகுதியாகும். அக்கம் பக்கத்தின் தாக்கங்கள், அதற்கான ஒரு நிலம் ஆகியவற்றை ஆயத்தம் செய்யாத வரை நன்மை அல்லது தீமை வளர்ச்சி அடைய முடியாது. ஆனால் சுற்றுப் புறமும் இரு வகைப்படும். ஒரே வகையான சுற்றுப்புற சூழ்நிலை ஒவ்வொருவரிடமும் ஒன்றுபோலவே தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது கட்டாயமல்ல. ஒருவகையான சூழ்நிலை தனிநபர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சமூக அளவிலான தாக்கத்தை ஒவ்வொருவரிடமும் ஏற்படுத்துவதில்லை. அதற்கு உதாரணம், ஒரு நிலத்தை ஒத்ததாகும். அதில் பிரத்யேகமான பயிர்களை விளைவிக்க முடிகிறது. உதாரணத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தந்துள்ளார்கள். இந்தியாவில் விளையக்கூடிய குங்குமப்பூ இருக்கிறது. இது இந்தியா முழுவதும் விளைவதில்லை. மாறாக, காஷ்மீரில் விளைகிறது. அங்கும் கூட குறிப்பான சில பகுதிகளில்தான் சிறப்பான வகை குங்குமப்பூ விளைகிறது. அது உயர்தரமானதாகும். நறுமணமிக்க பாசுமதி அரிசி காலர் என்ற பகுதியில் விளைகிறது. பாகிஸ்தானில் வேறு எந்த இடத்திலும் அது விளைவதில்லை.

இதற்கு எதிரில் இன்னும் சில பயிர்கள் உள்ளன. கோதுமை இருக்கிறது. சில சிறப்பான வகை தோட்டங்கள் உள்ளன. இவை ஒரு நாட்டின் எல்லா இடத்திலும் உருவாகின்றன. உற்பத்தியில் கூடுதல் குறைவுகள் இருக்கலாம். ஆனால் விளைகின்றன. அதுபோன்று நன்மைகளும் தீமைகளும் கூட சில தாக்கங்களின் கீழ் சமூக தரத்தைப் பெற்றுள்ளன. அவை முழு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கோ அல்லது அழிவிற்கோ காரணமாக இருக்கின்றன. தனி மனித தீமைகள் தனி மனித முயற்சியால் சரியாகலாம். முயற்சி செய்தால் தீமைகள் விலகுவது மட்டுமின்றி தனி நபர்களிடம் தனி மனித சிறப்புகளும் கூட உருவாக முடியும். ஆனால், சமூக தாக்கங்களின் கீழ் தீமைகள் அல்லது நன்மைகள் எற்பட்டிருந்தால் அவற்றிற்கு ஒரேயொரு மனித முயற்சி பயன் தர முடியாது. ஏனெனில் தனி மனிதன் ஒட்டுமொத்த அமைப்பின் ஓர் அங்கமாவான். ஒட்டுமொத்த அமைப்பில் ஒரு கேடு ஏற்படும்போது அது அவ்வங்கத்தை சீர்திருத்துவதினால் சரியாக முடியாது. மாறாக

ஒட்டுமொத்தமும் கெட்டுப்போய் இருந்தால் அதனால் தனி மனிதனிடம் பாதிப்பு ஏற்படுகிறது. ஒரு பகுதியின் சுற்றுப்புறச் சூழல் சீர்கெட்டுப் போயிருந்தால் அந்த சூழ்நிலையின் காரணமாக அங்கு வசிக்கும் எல்லாருமே பாதிக்கப்படுவார்கள்.

ஒரு மனிதர் விஷம் அருந்தி விட்டார் என்றால் வெளிப்படையாக அவரது கை, கால், மூளை ஆகிய உறுப்புகள் அதனால் பாதிக்கப்படாமல் இருக்கவே முடியாது. அது எல்லா உறுப்புகளிலும் பாதிப்பை உருவாக்கி விடும். அதுபோன்று உணவு, மாமிசம், பழங்களை நாம் உண்கிறோம். பல்வேறு பொருள்களை உண்கிறோம். அவற்றிலிருந்து உடலிலுள்ள ஒவ்வோர் அங்கமும் பயன் பெறும். ஏனெனில் அந்த எல்லா உறுப்புகளும் ஒட்டுமொத்தத்தின் ஒரு பகுதியாகும். எனவே அது விஷத்திலும் பங்கு பெறுகிறது. நல்ல உணவிலும் பங்கு பெறுகின்றன.

எனவே இங்கு அவசியமான விஷயமாவது நம்மில் ஒவ்வொருவரும் தமது நஃப்ஸின் பலவீனங்களைப் பார்க்க வேண்டும். அதே வேளையில் சமுதாய அளவில் நமது பலவீனங்களைப் பார்ப்பதும் அவசியமாகும். அதனை அடையாளம் காண வேண்டும். பிறகு சமுதாய அளவில் அதற்கு சிகிச்சைக்காகவும் குணமடைவதற்காகவும் முயற்சி செய்ய வேண்டும். இதற்காக சிகிச்சை செய்வதில் ஒவ்வொருவரும் தத்தமது பங்கை அளிக்க வேண்டும். ஏனெனில் கூட்டு முயற்சி இன்றி, ஒட்டுமொத்த அளவில் சிகிச்சை செய்யாமல் வெற்றி பெற முடியாது. உலகச் சட்டங்களைப் பார்த்தாலும் கூட இயற்கை சீற்றங்கள், வெள்ளப்பெருக்கு வருகிறது. எந்தவொரு நிலக்கிழாரும் தமது நிலத்தை மட்டும் அடைத்து வெள்ளத்திலிருந்து காப்பாற்றி விட முடியாது. அணை கட்டி தடுப்பது அதற்காக திட்டமிடுவது எல்லாம் அரசின் வேலையாகும். கூட்டு முயற்சி அரசின் தரப்பிலிருந்து செய்யப்படுகிறது. அரசு என்பது மக்கள் ஒன்றிணைவதின் பெயராகும். அரசே ஒன்றும் உதவாததாக இருந்தால் அதனால் முழு சமுதாயத்திற்குமே பாதிப்பு ஏற்படும்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பொறுத்தவரை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கவனமூட்டியவாறு இந்த சமுதாய தீமையிலிருந்து எவ்வாறு தப்பிக்க வேண்டும்? அதனைப் பற்றி எவ்வாறு சிந்தனை செலுத்த வேண்டும்? என்று கூறியுள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஜமாஅத் சில கோணங்களில் இதன் பக்கம் கவனம் செலுத்தி அதற்காக சிகிச்சை செய்தால் பலன் ஏற்படும். அதற்கு பல்வேறு வழிமுறைகள் உள்ளன. முதல் வழி, கல்வி இது எந்த சமுதாயத்திடம் உள்ளதோ அதன்படி செயல்படுவதை ஒவ்வொருவரும் தமது கடமையாகக் கருத வேண்டும். ஒன்று, தீமையான விஷயமாக இருக்கும் என்றால் அல்லது அந்த போதனையால் தவறான விளைவு ஏற்பட முடியும் என்றால் அது சில மார்க்கங்களில் உள்ளது. ஒரு மார்க்கத்தில் தவறான கொள்கைகள் இருக்கும் எனில் அதனை பின்பற்றுகிற ஒவ்வொருவரிடத்திலும் அதனால் பாதிப்பு ஏற்படும். மேலும் பண்பாடு மற்றும் சமூக வாழ்விலும் அதனால் தீய விளைவு ஏற்படும். இது வெறும் மார்க்க அளவோடு நிற்பதில்லை. மாறாக, சமூக வாழ்க்கையிலும் கூட கலாச்சார வாழ்க்கையிலும் தீய விளைவு ஏற்படும். ஆனால் நாம் முஸ்லிம்கள்; திருக்குர்ஆனை இறைவனுடைய வார்த்தை என்று கருதுகிறோம். அந்த போதனையில் எந்தக் குறைபாடும் இல்லை என்றும் உறுதி கொண்டுள்ளோம். அதிலிருந்து தீய விளைவு ஒருபோதும் வெளிப்படவே முடியாது. அதிலிருந்து ஒரு தீமை உருவாவது என்பதும் நடக்கவே முடியாது. ஆனால் எல்லா முஸ்லிம்களும் தீமையிலிருந்து சுத்தமானர்களாகவா இருக்கிறார்கள்? நாம் நமது சுற்றுப்புறத்தை ஆய்வு செய்கிறபோது, முஸ்லிம்களின் பொதுவான நிலைமைகளைப் பார்க்கிற போது தெரிய வருகிறதாவது, பெருமபாலார் தீமையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இதனை கவனிக்க வேண்டியது அவசியமாகும். திருக்குர்ஆனில் எந்தக் குறைவும் இல்லை.

திருக்குர்ஆனில் போதனை ஒவ்வொரு குறைகளிலிருந்தும் தூய்மையானதும் முழுமையாக்குவதும் முழுமையாக்கப்பட்டதும் ஆகும் என்பதை நான் உறுதியாகவே உண்மையானது என்று கருதுகிறோம். கேள்வி என்னவென்றால் பிறகு குறை எங்கே உள்ளது என்பதுதான். ஆகவே, திருக்குர்ஆனில் எந்த குறையும் இல்லை என்கிற போது நிச்சயமாக நமது புரிதல் மற்றும் நடைமுறைப்படுத்துவதில் தான் தவறு உள்ளது. திருக்குர்ஆனில் உறுதியாக எந்தக் குறையும் இல்லை. நமது புரிதலின் குறைபாட்டின் காரணமாக சமுதாயம் பாதிக்கப்பட்டுள்ளது. சுற்றுப்புறத்தின் பாதிப்பு ஏற்பட்டு விட்டது. பிற மார்க்க பாதிப்பு ஏற்பட்டு விட்டது. நாகரிகம் மற்றும் கலாச்சாரத்தின் பாதிப்பு ஏற்பட்டு விட்டது. தவறான விதத்தில் அதனை மார்க்கத்தின் ஓர் அம்சமாக உணரப்பட்டு விட்டது.

அல்லாஹ்வின் கருணையால் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் இணைந்துள்ளோம். அந்த பழைய நடைமுறைகள் ஞானமற்ற மரபுகள், அந்த விரிவுரைகளின் பாதிப்புகள் நம்மிடம் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. ஏற்படுத்தவும் கூடாது. ஆனால் இருந்தும் கூட நாம் முழுமையாக பாதுகாப்பாக இல்லை. ஏன் இல்லை என்றால் தமக்கென சில கொள்கைகளைக் கொண்ட மக்கள் ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். பல சந்தர்ப்பங்களில் சில விஷயங்களில் சந்தேகங்களுக்கு உள்ளாகின்றனர்.

எவ்வாறிருப்பினும், பொதுவாக நாம் தவறான கொள்கைளிலிருந்து அல்லாஹ்வின் அருளால் தூய்மையாக இருக்கிறோம். ஆனால் நம்மை நாமே தூய்மையானவர்களாக வைப்பது நிரந்தரமாக இருக்க வேண்டும். அதற்கான வழியாவது நாம் அஹ்மதி அல்லாதவர்களின் தவறுகளில் எப்போதும் கவனத்தை வைத்திருக்க வேண்டும். ஏனெனில் பார்வையை வைத்திருந்தால் மட்டுமே நம்மிடத்தில் தவறுகள் நுழைவதிலிருந்து தடுக்க முடியும். பிறகு இன்னொரு விஷயத்திலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். நமது சுற்றுப்புறத்திலுள்ள பிற மார்க்கத்தவர் அல்லது ஏதாவது ஒருவகை மக்கள் வாழ்கிறார்கள் அல்லது ஏதாவது மார்க்கத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றனர் அவர்களிடத்தில்

என்னென்ன சமுதாயக் குறைபாடுகள் உள்ளன. இந்த வட்டத்தில் நாடு அளவில் சமுதாய குறைபாடுகள் வரை விரிவாக பார்க்க வேண்டும். அவர்களின் நிறை குறைகள் அனைத்தும் நன்கு காணக் கிடைக்கின்றன. அண்டை நாடுகளின் தாக்கங்கள் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு ஏற்பட்டுக் கொண்டே செல்கிறது. பிள்ளைகள் எந்த சுற்றுப் புறத்தில் வசிக்கின்றனரோ அந்த சுற்றுப்புறத்தின் தாக்கம் அவர்களிடம் ஏற்படுகிறது. தாய் தந்தையர் வேண்டுமானால் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் எங்கெல்லாம் பலவீனங்கள் உள்ளதோ அதனை கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையிலும் கூட சுற்றுப்புறம் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

பிறகு இன்னொரு விஷயம் பிள்ளைகள் அதிக நேரங்கள் பள்ளிக்கூடத்திலும் பிற சிறுவர்களுடன் விளையாடுவதிலும் கழிக்க வேண்டியதுள்ளது. வீடுகளில் தன்னாலேயே சில நண்பர்கள் டி.வி மூலமாக வந்து நுழைந்து விடுகின்றனர். அவர்கள் மூலமாக பெரியவர்களும் சிறுவர்களும் ஒன்றுபோல் தாக்கத்திற்கு ஆளாகின்றனர். அதன் விளைவு என்னவென்றால் பிள்ளைகள் பெற்றோரின் பேச்சைக் கேட்க விரும்புவதில்லை. தாய் தந்தையர் தாமும் கூட தமது பிள்ளைகளுடன் இடைவெளியை ஏற்படுத்திக் கொண்டே போகின்றனர். தமது வேலை பளுவின் காரணமாக அல்லது வேறு காரணங்களால் இவ்வாறு நிகழ்கிறது. அல்லது டி.வி மூலமாக அல்லது இவை மூலமாக வீடுகளின் சூழ்நிலையை தாமே சீர்கேடு அடையச் செய்கிறார்கள். எவ்வாறிருப்பினும் இதனால் என்ன விளைவு ஏற்படுகிறது? அல்லது ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால் தாய் தந்தையர்கள் பிள்ளைகளின் மீது அநீதியிழைக்கின்றனர் அல்லது பிள்ளைகள் பெற்றோரை மதிப்பதில்லை. பிறகு இது தனி மனித தீமையாக இருப்பதில்லை. இது சமூக தீமையாக மாறிக் கொண்டே செல்கிறது. வீடுகள் நாசமாகின்றன. பெற்றோர் பிள்ளைகளை ஆன்மீகமாகவும் கொல்கின்றனர். பௌதீகமாகவும் கொல்கின்றனர். மேற்கத்திய சமுதாயம் சுதந்திரம் என்ற பெயரில் ஓர் அழிவின் பக்கம் சென்று கொண்டே இருக்கிறது. அது ஒரு சமூக தீமையாகும். ஆனால் அதன் ஆதிக்கத்திற்குள் சில அஹ்மதிகளும் வந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு அதன் பக்கம் மீண்டும் திரும்பிச் செல்லுமுன் இத்தீமை பரவுவதற்கு முன் நாம் சமுதாய அளவில் இத்தீமையிலிருந்து தப்பிப்பதற்கு ஒரு முயற்சியை விரைந்து செய்வது அவசியமாகிறது.

எனவே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எல்லா அங்கமும் இதன் பக்கம் ஆய்வு செய்வதற்காக அமர்ந்து ஆலோசனை செய்ய வேண்டும். திட்டமிட வேண்டும். நாம் உலகிற்கு சிகிச்சை செய்யப்போவதாக பொறுப்பு எடுத்துள்ளோம். நாம் உலகிற்கு சிகிச்சை செய்வோம் என்று வாக்களித்துள்ளோம். பிரகடனம் செய்துள்ளோம். சிகிச்சை செய்பவரே நோயாளியாகி விட்டால் உலகிலிருந்து தனி மனித தீமைகளையும் சமுதாய தீமைகளையும் யார் அகற்றுவார்? பிறகு இன்னொன்றையும் முன் வைத்தவாறு ஆய்வு செய்ய வேண்டும். ஒரு சமுதாயத்தில் சில பிரத்யேக சூழ்நிலையின் காரணமாக ஒரு சில நன்மையும் உருவாகலாம். சில தீமைகளும் உருவாகலாம்.

அதற்கு உதாரணம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: நமது ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் எல்லா இடத்திலும் பரவியுள்ளது. அத்துடன் நமது ஜமாஅத்தின் ஒரு கொள்கையாவது நாம் ஒருபோதும் அஹ்மதி அல்லாதவர்களின் பின்னால் தொழக் கூடாது என்பதாகும். இறைவன் இமாமாக ஆக்கி அனுப்பியவரை அந்த அஹ்மதி அல்லாத இமாம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்ளாதது மட்டுமின்றி மிகமிக மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தவும் செய்கின்றனர். நாம் இறைவனால் நியமிக்கப்பட்ட இமாமை விட அடியார்களால் நியமிக்கப்பட்ட இமாமுக்கு முன்னுரிமை தர இயலாது. எனவே நாம் அவர்களின் பின்னால் தொழுவதில்லை. எனவே அங்கு வீடுகளிலேயே தொழுது கொள்கின்றனர். எல்லாரும் சேர்ந்து தொழுவதற்குப் பதிலாக ஒவ்வொருவரும் தனித்தனியாக தொழுகின்றனர். இதனைப் பற்றி முன்னரும் கவனமூட்டியுள்ளேன். வீட்டிலேயே ஜமாஅத்தாக தொழுது கொள்ளுங்கள்; அதில் தவறில்லை அல்லது சிலர் வேலைப் பளுவின் காரணமாக தொழுகையை தனியாகத் தொழுகின்றனர். சிலர் வேலைப் பளுவின் காரணமாக தொழுகைகளை சேர்த்து தொழுகின்றனர். இந்த எல்லா காரணங்களும் ஏற்படுவது பள்ளிவாயிலுக்கு செல்வதில் கவனமில்லை அல்லது பள்ளிவாயில்கள் அருகில் இல்லை என்பதாகும். அல்லது வேறு சில காரணங்களின் காரணமாக அங்கு செல்வதில்லை. ஆனால் வீட்டில் தொழுது கொள்கின்றனர்.

பொதுவாக ஜமாஅத்தாக தொழுவதில் கவனம் இல்லை அல்லது இன்னொன்றும் உள்ளது. காரணமில்லாமல் தொழுகைகளை சேர்த்து தொழுவதில் அதிக கவனம் ஏற்பட்டு விட்டது. கவனமூட்டப்பட்டும் மீண்டும் மீண்டும் அறிவுறுத்தியும் கூட பெரும்பாலானவர்களுக்கு ஜமாஅத்துடன் தொழுவதில் ஆர்வம் இல்லை. இது ஒரு சமுதாய நோய் போன்று ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே, இதற்காக கடுமையாக சிகிச்சை செய்வது மிக மிக அவசியமாக உள்ளது. இது தனி மனித குறைாடு அல்ல. இன்ன மனிதர் ஜமாஅத்தாக தொழுவதற்கு பள்ளிவாயிலுக்கு வரவில்லை என்பது கவனமின்மையின் வெளிப்பாடு ஆகும். இது சமுதாய நோய் மற்றும் சமுதாய குறைபாடு என்ற வடிவத்தை அடைந்து விட்டது. சூழ்நிலைகளின் காரணமாக வசதிகள் ஜமாஅத்துடன் தொழுவதன் முக்கியத்துவத்தை குறைத்து விட்டன. பிற முஸ்லிம்கள் ஒருவேளை தொழுவதே இல்லை என்ற நிலையில் சந்தேகமின்றி அஹ்மதிகள் வீட்டில் தொழுகின்றனர். அவர்களுள் பெரும்பாலார் பணிவுடன் மனமுருகி தொழுபவர்களாகவும் இருக்கின்றனர்.

ஆனால் பிற முஸ்லிம்கள் வெளிப்படையான முறையில் காட்டுவதற்காக பள்ளிவாயிலுக்குச் சென்று தொழுகின்றனர். இப்போது பாகிஸ்தானில் அஹ்மதி அல்லாதவர்களின் பள்ளிவாயிலுக்குச் சென்று தொழுவதில் கவனம்

அதிகமாக ஏற்பட்டு விடவும் செய்திகள் வருகின்றன. அவர்கள் கவனமாக தொழுகிறார்களா? இல்லையா? என்று தெரியாது. ஆனால் கண்டிப்பாக செய்கிறார்கள். அவர்களுக்கு இதன் பக்கம் கவனம் ஏற்பட்டு விட்டது. நமக்கு இதில் கவனம் குறைவாக உள்ளது. ஆகவே, நாம் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். பள்ளிகளை உண்மையான நம்பிக்கை கொண்டவர்களே நிரப்ப வேண்டும். காலத்தின் இமாமை ஏற்றவர்களே உண்மையான நம்பிக்கை கொண்டவர்களாவர். அது அல்லாமல் இறைவணக்கத்தின் பெயரால் குழப்பத்தையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்துபவர்களல்ல. சிறுவர்களிடம் அதன் முக்கியத்துவம் குறையும்போது சமுதாய அளவில் பள்ளிவாயிலுக்கு சென்று தொழாமல் இருப்பது அல்லது தொழுகையைச் சேர்த்து தொழுதல் ஆகிய குறைபாடு அதிகரிக்கின்ற ஆபத்து ஏற்படும் சாத்தியக்கூறு அதிகமாகிறது.

சில சிறுவர்கள் தமது பெற்றோரின் நிலைமைகளைப் பார்த்து ஒரு நாளைக்கு மூன்று தொழுகைகள் என்று கூறுகின்றனர். ஐவேளை தொழுகைகள் இருக்கின்றன என்ற போதிலும் எமது பெற்றோர்களை மூன்று வேளை தொழுபவர்களாகவே காண்கின்றோம் என்கின்றனர். இது அல்லாமல் எல்லா இடத்திலும் ஆய்வும் திட்டமிடுதலும் அவசியமாகும். அது அல்லாமல் அடுத்த தலைமுறையில் இது ஒரு சமுதாய தீமையாகி விடும். இன்று உலகத்தின் நிலையாவது இறைவனிடமிருந்தும் மார்க்கத்திலிருந்தும் விலகிச் செல்கின்றனர். நாம் கடுமையான முறையில் முயற்சி செய்யாவிட்டால் பல்வேறு வகையான தீமைகள் நமக்குள் நுழையத் தொடங்கி விடும். ஒரு தீமைக்குப் பிறகு அடுத்த தீமை வருகிறது. பிறகு மார்க்கம் பெயரளவில் இருந்து விடும். உயிர் இல்லாமல் போய் விடும். ஏதாவது ஒரு பகுதியில் ஏதாவது தொற்று நோய் ஆரம்பித்து விட்டால் நாம் உடனே கவலைப்படத் தொடங்கி விடுகிறோம். முன்னெச்சரிக்கையாக தடுப்பு நடவடிக்கைகளை தொடங்குகிறோம் என்றால் ஆன்மீக நோய்களின் ஆபத்தை அகற்ற நாம் எந்த அளவுக்கு முயற்சி செய்ய வேண்டும்.

மார்க்க அறிஞர்கள் உருவாக்கிய தவறான கொள்கைகள் செயல்களின் காரணமாக இந்த உம்மத்தின் பெரும் பகுதி, முழுமையாக்கும் போதனைகளைக் கொண்டிருந்தும் கூட வழிதவறி விட்டது. நாம் நம்மை சீர்திருத்திய பிறக நிரந்தரமாக வழிகேட்டிலிருந்து தப்பிப்பதற்காக மிக அதிகம் முயற்சி செய்வது அவசியமாகும். அதில் கவனம் செலுத்துவது அவசியமாகும். எங்கெல்லாம் பிற முஸ்லிம்களிடம் குறைபாடுகள் உருவாகி இருக்கின்றனவோ அந்த அளவுக்கு மக்கள் வழிகெட்டுள்ளனர். நாம் அதிலிருந்து எவ்வாறு தப்பிப்பது? நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்களின் போதனையை அறிவதும் அதன்படி செயல்படுவதும் கூட மிக அவசியமாகும். நம்மை நாமே சுற்றுப்புற சூழ்நிலைகளுடன் செல்லுமாறு விட்டுவிடக் கூடாது. மாறாக சூழ்நிலையை நமது போதனைக்கேற்ப அமைப்பதே நமது பணியாகும். கிலாஃபத்துடன் தொடர்பை உறுதியாக்குவது அவசியமாகும். இக்காலத்தில் $M.T.A$ –வையும் ஜமாஅத்தின் இணையதளத்தையும் கூட அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். அதனுடன் இணைந்திருப்பது அவசியமாகும். இதன் மூலமாக உண்மையான குர்ஆனிய போதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அறிவு, ஞானம் நமக்கு தெரிய வரும். அதன் மூலம் நமக்கு உண்மையான இஸ்லாமிய போதனை கிடைக்கிறது.

எனவே, அதனுடன் நாம் இணைந்திருப்பது அவசியமாகும். ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். முஸ்லிம்களுக்கு குர்ஆன் போன்ற ஒரு வேதம் கிடைத்தும் கூட அவர்களிடம் இத்தகைய தவறுகள் உருவாகி விட்டன. அதன் விளைவாக அவர்களின் சில குறிப்பிட்ட நோய்கள் உருவாவது கண்டிப்பானதாகி விட்டது.

இக்காலத்தில் அதற்காக வழிகாட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு பல விதிமுறைகளைக் கூறியுள்ளார்கள். தாமே தெளிவான விரிவுரைகள் தந்து கூறியுள்ளார்கள். அதனை நாம் முன்னிறுத்த வேண்டும். அதற்கேற்ப திருக்குர்ஆனிலிருந்து புதிய புதிய கருத்துக்களைத் தேட வேண்டும். பிற முஸ்லிம்களைப் போன்று பழைய விரிவுரைகளை மட்டும் நாம் நெருங்கி இருந்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழிகாட்டிய எந்த இறை ஞானமும் நமக்கு திறக்காது. எவ்வாறிருப்பினும் திருக்குர்ஆன் முழுமையாக்குவதும் முழுமையாக்கப்பட்டதுமான நூல் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அதில் எல்லாம் இருக்கிறது. ஆனால் அதனை படித்து சிந்திக்கக் கூடியவர்கள் அதன் போதனைக்கேற்ப செயல்படுபவர்களுக்கு மட்டும் தான் நேர்வழி கிடைக்கிறது. ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு நேர்வழி கிடைத்து விட்டது என்று கூறுவது போதுமானதன்று. மாறாக, ஒவ்வொரு விஷயத்திலும் அமல் செய்வது அவசியமாகும். சமுதாய நிறை குறைகள் அதிலிருந்து தெரிய வருகிறது. இந்த வேதத்தில் பின்னால் வரக்கூடியவர்களின் சிந்தனையை விரிவுபடுத்தும் பொருட்டும் வெளிச்சத்தைக் காட்டும் பொருட்டும் திருக்குர்ஆனை புரிவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவரை அனுப்புவதாக பிரகடனம் செய்தான். ஆனால் சிந்தனை செய்பவர்கள் இல்லை. உலமா என்று கூறப்படுபவர்களும் அறிவீனர்களாக இருக்கிறார்கள். இறைவனால் அனுப்பப்பட்டவரை மறுக்கின்றனர். திருக்குர்ஆனின் ஞானங்களின் பரந்துபட்ட நிலையிலிருந்து இதன் காரணமாக விலக்கப்பட்டனர். அறியாமையில் மூழ்கி இஸ்லாத்தை எடுத்துக் காட்டுவதற்குப் பதிலாக அதற்கு கெட்ட பெயர் ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர்.

எனவே இந்த முஸ்லிம்களின் இந்த செயலைப் பார்த்து நாம் இன்னும் அதிகம் சிந்திப்பவராகவும் கவனமானவர்களாகவும் ஆக வேண்டும். வெளிப்படையான விஷயங்களை மட்டுமே போதுமானதாக நாம் ஆக்கிக் கொள்ளக்கூடாது. மாறாக இஸ்லாத்தின் போதனையின் உயிரைப் புரிந்தவாறு ஒவ்வொரு தீமையையும், சமுதாய தீமையாக உருவெடுக்கும் முன் அகற்றுபவராக வேண்டும். ஒவ்வொரு நன்மையையும் சமுதாய நன்மையாக்கி முழு ஜமாஅத்தில் அதனை நடைமுறைப்படுத்துபவராக வேண்டும். எப்போதும் நாம் ஒரு சுற்றுச்சூழலை உருவாக்க வேண்டும். அதனை நோக்கி நமது

வரக்கூடிய தலைமுறையை திருப்ப வேண்டும். அவர்களிடம் தீமைகள் பரவாமல் நிறைகளும் நன்மைகளும் உருவாக வேண்டும். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

இன்று தொழுகைக்குப் பிறகு இரண்டு ஹாஸிர் ஜனாஸாக்களுக்கு தொழ வைப்பேன். இரண்டு காயிப் ஜனாஸாவும் தொழ வைப்பேன்.

கொண்டு வரப்பட்டுள்ள ஜனாஸாவில் ஒன்று, கண்ணியத்திற்குரிய ரஷியா முஸர்ரத் கான் சாஹிபா. இவர் 11 பிப்ரவரி 2015 அன்று தமது 75வது வயதில் மரணமடைந்தார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அல்லாஹ் மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக! இரண்டாவது ஜனாஸா அமீர் ஷிராஸ் சாஹிப். இவர் ஷஹீது மஹ்மூது உடைய மகன். தெற்கு மார்டனைச் சார்ந்தவர். 12 பிப்ரவரி 2015 அன்று புற்றுநோயால் தனது 29வது வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

காயிப் ஜனாஸா முதலில் அல்ஹாஜ் ரஷித் அஹ்மது சாஹிப் உடையது. இவரது மரணம் மல்வாக்கி அமெரிக்காவில் 7 பிப்ரவரி 2015 –ல் நடந்தது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அடுத்த ஜனாஸா காயிப் ஹஸன் அப்துல்லாஹ் சாஹிப் டெட்ராயிட் அமெரிக்கா – இவரும் அமெரிக்கன் ஆவார். 30 ஜனவரி 2015 –ல் இவர் வஃபாத் ஆனார். இன்னாலில்லாஹ் வஇன்னா ராஜிவூன். எல்லா மர்ஹூம்களை விட இவரது தகுதியை உயர்த்துவனாக!

From : Nazarath Nashr-o-Isha'ath, Qadian - 143 516, Distt Gurdaspur, Punjab.

Translated by **Muallim M. Nizamudeen** for Tamil Desk